# முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.710/2017

வா.சா.1 சந்தோஷ்

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் மேல்முறையீட்டு வழக்கு எண்.923/1992 வழக்கில் 5 ம் மேல்முறையீட்டு வாதியாக சேர்ந்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டில் 5 ம் மேல்முறையீட்டு வாதியாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்தபோது அ.வ.327/1986 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்பாணையின் முழுவிபரம் தெரிந்து கொண்டுதான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி மேல்முறையீ டு வழக்கு எண்.923/1992 வழக்கில் அப்பீல் வாதியாக சேர்க்கக்கோரி என்னால் தாக்கல் செய்யப்பட்ட சி.எம்.பி.எண்.15364.15365, 15366/2003 மனு என்றால் சாட்சி தெரியாது என்று கூறுகிறார், சாட்சியிடம் மேற்படி ஆவணங்களை படித்து பார்த்து சாட்சியம் அளிக்கும்படி எதிர் தரப்பில் கேட்டபோது சாட்சி படித்து பார்த்து தெரிந்து கொள்ள முடியாது என்று கூறுகிறார். நான் எம்.பி.ஏ படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா தெரியாதா என்றால் ஆங்கிலம் படிக்க தெரியும். எனது தாத்தா அத்தப்பன் 19.12.2001 தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். என் தாத்தா யாருக்காவது சொத்து எழுதிவைத்துள்ளாரா என்றால் எனக்கு உயில் எழுதிவைத்துள்ளார். எந்த தேதியில் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் 15.10.2001 தேதியில் உயில் எழுதி வைத்தார். இந்த வழக்கில் உயில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் என் தகப்பனார் வழியில் வாரிசு அடிப்படையில் பாகம் கேட்கிறேனா என்றால் பூர்வீக வழியிலும், உயில் சாசனத்தின் அடிப்படையிலும் பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

என்னுடைய வழக்குரையில் என் பெயரில் உயில் சாசனம் இருப்பதாக தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை, தேவையில்லாததால் தெரிவிக்கவில்லை. இ.பி.எண்.54/2012 ல் இ.ம.எண்.27/2022, என்ற மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில்

சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் நிறைவேற்று மனுவில் சாட்சியம் அளித்துள்ளேன். ஏற்கனவே நிறைவேற்று மனுவில் சாட்சியம் அளித்தபோது சென்னை உயர் நீதிமன்றத்தில் நான் தரப்பினராக சேர்ந்த மனுவில் எனக்கு பூர்வீக சொத்து என்ற அடிப்படையில் மனு தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதில் எனக்கு மாற்று கருத்து இல்லை என்றால் தாத்தா வழியில் வந்த பூர்வீக சொத்தாகும். நான் நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்த நிறைவேற்று இடைமனுவில் கண்டுள்ள சொத்தும், வழக்கின் தாவா சொத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சியம் அளித்தபோது மனு சொத்து பூர்வீக சொத்து என்பதில் எனக்கு மாற்று கருத்து இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

என் சகோதரி சோபனா என்பவருக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளதா இல்லையா என்றால் அவருக்கு பாகம் இல்லை. ஏற்கனவே சாட்சியம் அளித்த போது எனது சகோதரிக்கு பாகம் உள்ளதா இல்லையா என்று கேட்டபோது பாகம் உள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் என் தகப்பனாருக்கு பாத்தியம் உள்ளதா என்றால் அவருக்கு அவருடைய பங்கு உள்ளது. ஏற்கனவே நான் சாட்சியம் அளித்தபோது என் தகப்பனார் மூலம் எனக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, ஏற்கனவே நான் நிறைவேற்று மனுவில் சாட்யிம் அளித்தபோது என் தகப்பனார் மூலம் தான் எனக்கு சொத்து பாத்தியம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் வழிமுறை அடிப்படையில் தான் சொத்து பாத்தியம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனார் நல்ல மனிதர் என்றும் அவருக்கு தீய பலக்கம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரிதான். சென்னை உயர் நீதிமன்றத்தில் சி.எம்.பி.15364, 15366/2003 தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நெம்பர் தெரியாது. வள்ளியம்மாள், தேன்மொழி மற்றும் கவிதா ஆகியோர்கள் என்மீதும் எனது தகப்பானர் மீதும் மற்றும் பலர் மீதும் அ.வ.எண்.239/2018 என்ற வழக்கை 2 வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அதில் எனக்கு சம்மன் சார்பு செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை, அந்த வழக்கில் நான் ஆஜராகவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையது தான். மேற்படி வழக்கில் எனக்கு சார்பு செய்யப்பட்ட சம்மனில் உள்ள கையெழுத்து அடங்கிய சான்று நகல் பி.த.சா.ஆ.7 ஆகும். என்னிடம் காட்டப்படும் மற்றொரு சம்மனில் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து என்றால் தெரியாது. அ.ச.எண்.239/2018 வழக்கின்

நடவடிக்கைகள் பற்றி எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் தெரியாது. ஏற்கனவே நான் நிறைவேற்று மனுவில் சாட்சியம் அளித்தபோது அ.வ.எண்.239/2018 வழக்கு நடவடிக்கைகள் பற்றி தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேல்முறையீட்டு வழக்கு எண்.923/1992 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு என்றால் தெரியாது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கு முடிந்துவிட்டது என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.